பிரசார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

04 10 2026 6 30
ஞாயிற்றுக்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) வளர்ச்சியடைந்த இந்தியா என்பது பொருளாதார வளர்ச்சிக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும் என்று குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டுள்ளார்.

2) விளையாட்டுத் துறையின் வளர்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தனிக்கவனம் செலுத்தி வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர். எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3) மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று நிறைவடைந்தது.

4) தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் பாதிப்பு கட்டுக்குள் உள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

5) ஆசிய விளையாட்டுப் போட்டிகள் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் இன்று ஜப்பானில் நிறைவடைந்தன.

--- இனி விரிவான செய்திகள் ---

<><><><><>

வளர்ச்சி அடைந்த இந்தியா என்பது பொருளாதார வளர்ச்சிக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும் என்று குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மக்களிடையே நம்பிக்கை, குடும்ப மாண்புகள், இளையோரிடையே நன்னெறிகள் போன்றவற்றின் அடிப்படையில் வளர்ச்சியடைந்த இந்தியா உருவாக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

<><><><><>

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக சுகாதார துறை பெரிய அளவில் வளர்ச்சி கண்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர். எல். முருகன் கூறியுள்ளார்.

இன்று கோவையில் பல் மருத்துவக் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று அவர் உரையாற்றினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி அளித்துவரும் ஊக்கம் காரணமாக ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா 85 பதக்கங்களை வென்றுள்ளதாக தெரிவித்தார்.

<><><><><>

தாராபுரம், மதுராந்தகம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைந்தது.

இதனையடுத்து தொகுதிக்கு தொடர்பில்லாத வெளி நபர்கள் அப்பகுதியை விட்டு வெளியேற வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

இந்த இரண்டு தொகுதிகளிலும் நாளை மறுநாள் வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

வாக்கு எண்ணிக்கை 9 ஆம் தேதி மேற்கொள்ளப்படுகிறது.

<><><><><>

தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் கட்டுக்குள் உள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலர் டாக்டர். தாரேஸ் அகமது கூறியுள்ளார்.

இன்று சென்னையில் டெங்கு தடுப்புப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

மாநிலம் முழுவதும் டெங்கு தடுப்புப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

டெங்கு மேலாண்மை குறித்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் டாக்டர். தாரேஸ் அகமது கூறியுள்ளார்.

<><><><><>

தமிழகத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த மூன்று தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புக்கு உள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர். வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

<><><><><>

நாகை மாவட்டம் வேதாரண்யம் அருகே மழைக்கால பேரிடர் மீட்பு ஒத்திகை நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

தலைஞாயிறு கடைத்தெரு அருகே உள்ள பாலசமுத்திர குளத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சார்பில் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<><><><><>

நவராத்திரி பண்டிகையொட்டி காஞ்சிபுரத்தில் கொலு பொம்மைகள் தயாரிக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

அஸ்தகிரி தெருவில் 50 குடும்பங்களுக்கும் மேற்பட்ட கைவினைக் கலைஞர்கள் இப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த பொம்மைகள் குறைந்தபட்சம் 100 ருபாயில் இருந்து அதிகபட்சமாக 10 ஆயிரம் ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதாக கைவினைக் கலைஞர் திரு. பாஸ்கர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இங்கு விற்பனை செய்யப்படும் பொம்மைகள் அழகுற வடிவமைக்கப்பட்டுள்ளதாக அவற்றை வாங்கியவர்கள் தெரிவித்தனர்.

<><><><><>

கடலூர் மாவட்டத்தில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் நடத்தப்பட்ட போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்பில் பங்கேற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களை ஆட்சியர் திரு. சிபி ஆதித்ய செந்தில்குமார் இன்று வழங்கினார்.

<><><><><>

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் தேசிய சுகாதார இயக்க திட்ட இயக்குநர் திரு. அனிஷ் சேகர் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

<><><><><>

தருமபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டியில் உள்ள சுதந்திரப்போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவா மணிமண்டபத்தில் உள்ள அன்னாரது நினைவிடத்தில் ஆட்சியர் திரு. சரவணன் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

<><><><><>

நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையத்தில் காவல்துறை சார்பில் சாலை பாதுகாப்பு குறித்து நூதன முறையில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

<><><><><><>

மதுரை திருமங்கலம் அருகே நேரிட்ட சாலை விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

<><><><><><>

சேலம் மாவட்டம் பூலாம்பட்டி படகுத்துறையில் சுற்றுலாப் பயணிகள் இன்று குவிந்தனர்.

<><><><><><>

ஈரோடு மாவட்டம் ஆசனூர் மலைப் பகுதியில் சிறுத்தை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்தார்.

<><><><><><>

ஆசிய விளையாட்டுப் போட்டிகள் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் இன்று ஜப்பானில் நிறைவடைந்தன.

நிறைவு நிகழ்ச்சி வீரர்கள் அணிவகுப்பில் இந்தியாவின் தேசியக் கொடியை, இப்போட்டிகளின் துப்பாக்கிச் சுடும் பிரிவில் இரண்டு தங்கப் பதக்கங்களை வென்ற Neeru Dhanda ஏந்திச் சென்றார்.

இப்போட்டிகளின் கோல்ஃப் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற Pranavi-க்கு 10 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையை இந்திய கோல்ஃப் சம்மேளனம் அறிவித்துள்ளது.

2030 ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டிகள் தோஹாவில் நடைபெற உள்ளதை ஒட்டி, அதற்கான ஜோதி கத்தார் பிரதிநிதிகளிடம் வழங்கப்பட்டது.

-------------

Cairo-வில் நடைபெற்ற சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Sarthak Arya தங்கப்பதக்கம் வென்றார்.

17 வயதிற்குட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் 11-7, 12-10, 12-10 என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் Nikita Rybakov -வை வென்றார்.

<><><><><><>

உலக Judo சாம்பியன் போட்டி Azerbaijan-னின் Baku-வில் இன்று தொடங்கியது.

இந்தியாவின் சார்பில் Asmita Dey, Yamini Mourya உட்பட 9 பேர் இதில் பங்கேற்றுள்ளனர்.

<><><><><><>

Dutch ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Aakarshi Kashyap வெள்ளிப்பதக்கம் வென்றார்.

<><><><><><>

சீன Smash டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Manav Thakkar – Manush Shaah இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

<><><><><><>